**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 264/2024**

**CNR No. TNMY06-001526-2024**

லெட்சுமிகாந்தன் ..வாதி

...எதிர்...

1. வட்டாட்சியர் அவர்கள்,
   தரங்கம்பாடி.
   (Amended carried out as per Order in IA.No.2/2025, dated: 03.01.2025)
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மயிலாடுதுறை. ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 26.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வேணுகோபாலன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்திற்கு கிரய பத்திரத்தின் படி வாதிக்குரிய அளவுகள் பூமியில் இருந்தும், சர்கார் கணக்கில் முறையே பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றில் உள்ள தவறான அளவுகளை நீக்கி பத்திரப்படி வாதிக்குரிய இடத்தை அளந்து அதற்குரிய பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றை வாதிக்கு தனியே பிரித்து சர்கார் கணக்கில் சரியாக திருத்தம் செய்து ஏற்றி வாதிக்கு விளம்பல் பரிகாரம் அளிக்கக் கோரியும், செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:37 +0530

**2. வாதியின்  வழக்குரைச் சுருக்கம்:**

வழக்கு சொத்து வாதியின் தாயார் காலஞ்சென்ற ஏகாம்பரம் பிள்ளை மனைவி சாரதாம்பாளுக்கு திருக்கடையூரில் இருக்கும் விசாலூர் முத்தையா பிள்ளை மனைவி தனபாக்கியத்தாச்சியிடம்  14.05.1960 தேதியில் கிரயம் பெற்ற சொத்து ஆகும். வாதியின் தாயார் தாவா சொத்தை சர்வ சுதந்திரமாய் அனுபவித்து வந்து 05.05.1998 ல் இறந்துவிட்டார். வாதியின் தாயார் இறப்பதற்கு முன்பே அவரது கணவர் இறந்து விட்டார். மேற்படி சாரதாம்பாளுக்கு வாதி மட்டுமே ஒரே வாரிசு. வழக்குச் சொத்து விசலூர் கிராமத்தில் வீடு, வீட்டை சார்ந்த கொல்லை,  வால்வீச்சு உட்பட புல எண்.13/15  நத்தம் ஜாரி 0.19 செண்ட், அதில் அமைந்துள்ள கதவிலக்கம் 34 கொண்ட வீடு (187×103 லிங்ஸ்).  சர்க்கார் படத்தில் தவறுதலாக நத்தம் நிலவரி திட்ட அடங்கல் கணக்கு பதிவேடு மற்றும் தூய சிட்டா பதிவேடு இவைகளில் பழைய புல எண்.130/பா, புதிய புல எண்.211/6 என்று பட்டா எண்.240 வாதியின் பத்திரத்திற்கு குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதை பொறுத்து வாதி பொதுமக்கள் குறை தீர்ப்பு நாளான்று மனு எண்.48, தேதி. 22.01.2024–ல் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தும் இதனால் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. வாதியினுடைய கிரய பத்திரத்தை கவனிக்காமல் அரசாங்கத்தில் வாதியின் தாயாரால் கிரயம் வாங்கப்பட்ட பத்திரப்படியான குறைவாக பட்டா வழங்கியும், அதைப் பொறுத்து நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல், பட்டா, சிட்டா பதிவேடுகளில் குறைவான அளவுகள் போட்டு, இரண்டு குழி குறைவாக வழங்கப்பட்டுள்ளது பொருத்து பலமுறை வட்டாட்சியரிடம் கோரிக்கை வைத்தும் செவி சாய்க்காமல் இருந்ததால் மாவட்ட ஆட்சியர் பொது மக்கள் குறை தீர்ப்பு நாள் அன்று மனு கொடுத்து நடவடிக்கை இது நாள் வரை எடுக்காமல் இருப்பதால் இவ்வழக்கை தொடர்ந்துள்ளார். எனவே வாதியின் தாயார் தாவா சொத்தை கிரயம் பெற்ற கிரய  பத்திரப்படி உள்ள அளவுகளுக்கு வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றில் சரியான அளவுகளை குறிப்பிட்டு வழங்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல.  தாவா

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:42 +0530

சொத்திற்கு புதிய புல எண்.211/6 என்பதையும் அதற்கு நத்தம் நிலவரி திட்டத்தில் முறையாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதையும் எதிர்வாதி வன்மையாக மறுக்கிறார். 1960 லேயே வாதியின் தாயார் கிரயம் பெற்றிருக்கும் போது பட்டா தவறாக வழங்கப்பட்டிருந்தால் அது குறித்து அவர் தாயார் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தற்போது வாதி நடவடிக்கை எடுப்பது ஏற்க கூடியதல்ல. வாதியின் வழக்கு காலவதியால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கு பட்டா பாஸ்புக் சட்டத்தின் படி நிலைநிற்க தக்கதல்ல. 1, 2 எதிர்வாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய 80 CPC யின் கீழான அறிவிப்பு வாதியால் கொடுக்கப்படாமல் இவ்வழக்கு அவசர நிமிர்த்தம் எதற்காக தாக்கல் செய்யப்படுகிறது என்ற விபரம் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை. எவ்வித அடிப்படை காரணமும் இன்றி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

**4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.**

1. பட்டா பாஸ் புத்தகச் சட்டப்படி இந்த வழக்கு நிலைக்கநிற்கக் கூடியதல்ல என்பது உண்மையா?

2. வழக்கில் கோரி உள்ளபடி விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா ?

3. வேறு பரிகாரம் என்ன

**5.** இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதியின் மகன் ராமசெல்வம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் ஏதும் இல்லை.

**6. எழுவினா 1 மற்றும் 2-க்கான தீர்வு:**

வாதி தரப்பு வழக்கானது வழக்கு சொத்து வாதியின் தாயார் சாரதாம்பாளுக்கு 14.05.1960 தேதியிட்ட கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றும், வாதியின் தாயார் தாவா சொத்தை சர்வ சுதந்திரமாய் அனுபவித்து வந்து 05.05.1998 ல் இறந்துவிட்டதாகவும், வாதியின் தாயார் இறப்பதற்கு முன்பே அவரது கணவர் இறந்து விட்டதாகவும், மேற்படி சாரதாம்பாளுக்கு வாதி மட்டுமே ஒரே வாரிசு என்றும், வழக்குச்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:48 +0530

சொத்து விசலூர் கிராமத்தில் வீடு, வீட்டை சார்ந்த கொல்லை, வால்வீச்சு உட்பட புல எண்.13/15 நத்தம் ஜாரி 0.19 செண்ட், அதில் அமைந்துள்ள கதவிலக்கம் 34 கொண்ட வீடு (187×103 லிங்ஸ்) என்றும், சர்க்கார் படத்தில் தவறுதலாக நத்தம் நிலவரி திட்ட அடங்கல் கணக்கு பதிவேடு மற்றும் தூய சிட்டா பதிவேடு இவைகளில் பழைய புல எண்.130/பா, புதிய புல எண்.211/6 என்று பட்டா எண்.240 வாதியின் பத்திரத்திற்கு குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், இதை பொறுத்து வாதி பொதுமக்கள் குறை தீர்ப்பு நாளான்று மனு எண்.48, தேதி. 22.01.2024–ல் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தும் இது நாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், வாதியினுடைய கிரய பத்திரத்தை கவனிக்காமல் அரசாங்கத்தில் வாதி தாயாரால் கிரயம் வாங்கப்பட்ட பத்திரப்படியான அளவுகளுக்கு குறைவாக பட்டா வழங்கியும், அதைப் பொறுத்து நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல், பட்டா, சிட்டா பதிவேடுகளில் குறைவான அளவுகள் போட்டு, இரண்டு குழி குறைவாக வழங்கப்பட்டுள்ளது பொருத்து பலமுறை வட்டாட்சியரிடம் கோரிக்கை வைத்தும் செவி சாய்க்காமல் இருந்ததால் மாவட்ட ஆட்சியர் பொது மக்கள் குறை தீர்ப்பு நாள் அன்று மனு கொடுத்து இது நாள் வரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் இவ்வழக்கை தொடர்ந்துள்ளதாகவும், எனவே வாதியின் தாயார் தாவா சொத்தை கிரயம் பெற்ற கிரய பத்திரப்படி உள்ள அளவுகளுக்கு வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றில் சரியான அளவுகளை குறிப்பிட்டு வழங்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதியின் வழக்கிற்கு பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வழக்கு சொத்தின் புல எண்.211/6 என்பதும், அதற்கு நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் முறையாகப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதையும் எதிர்வாதிகள் வன்மையாக மறுப்பதாகவும், 1960–லேயே வாதியின் தாயார் கிரயம் பெற்று இருக்கும்போது பட்டா தவறாக வழங்கப்பட்டிருந்தால் அது குறித்து வாதியின் தாயார் அப்பொழுது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும், வாதியின் தாயார் எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாமல் தற்போது வாதி நடவடிக்கை எடுப்பது ஏற்புடையதல்ல என்றும், பட்டா பாஸ் புத்தகச் சட்டப்படி வாதியின் வழக்கு நிலைநிக்கக்கூடியதல்ல என்றும், இவ்வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:53 +0530

தள்ளுபடி செய்ய கோரியுள்ளனர்.

8. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், வழக்கு சொத்து குறித்து வாதியின் தாயார் சாரதாம்பாள் பெயரில் உள்ள கிரய ஆவண பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வாதியின் தாயார் இறப்பு சான்று வா.சா.ஆ.2 ஆகவும், வாதியின் தாயார் சாரதாம்பாள் வாரிசு சான்று வா.சா.ஆ.3 ஆகவும், பட்டா 240 கிராம எண். 62 விசாலூர் கிராம நத்தம் புல எண்.217/6, பழைய புல எண். 130/15 பா, நத்தம் 0.07.38 மனை வரி தோராயா பட்டா வா.சா.ஆ.4 ஆகவும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொது மக்கள் குறை தீர்ப்பு நாள் அன்று வாதி மனு நகல் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதியின் மகன் ராமசெல்வம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய வாய்மொழி சாட்சியத்தில் வழக்கு சொத்தின் விஸ்தீரணம் வாருவாய் ஆவணங்களில் தவறாக உள்ளது என்றும், கிரய ஆவணப்படி வருவாய் ஆவணங்களில் சொத்தின் அளவீட்டை திருத்தம் செய்து தர கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வருவாய் ஆவணங்களில் விஸ்தீரணம் தவறாக இருப்பது குறித்து கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாகவும், மனுவுடன் கிரய பத்திரம், எப்.எம்.பி., வீ.ஏ.ஓ. சான்று இணைத்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதிகள்/ அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் வாய்மொழி சாட்சியம் எதுவுமில்லை.

10. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.1 வழக்கு சொத்து குறித்து வாதியின் தாயார் பெயரில் உள்ள 14.05.1996 தேதியிட்ட கிரய ஆவணத்தில் புல எண்.130/15பா நத்தம் ஜாரி (187×103 லிங்ஸ்) 0.19 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 பட்டா எண்.240 வாதி பெயரில் வழங்கியுள்ள மனை வரி தோராய பட்டாவில் பழைய புல எண். 130/15பா விஸ்தீரணம் 0.07.38 ஏர்ஸ் அதாவது 0.18.2 செண்ட் விஸ்தீரணத்திற்கு (0.55 குழி) பட்டா வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரய ஆவணப்படி வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 0.19 செண்ட் (0.58 குழி) ஆகும். எனவே வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட வழக்கு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:59 +0530

சொத்திற்கு கிரய ஆவணத்தில் கண்டுள்ளதைவிட குறைவான விஸ்தீரணம் குறிப்பிட்டு மனைவரி தோராய பட்டா வா.சா.ஆ.4 வழங்கபட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் வாதியின் தாயார் இறந்துவிட்டார் என்பதும், வாதியின் தாயார் சாரதாம்பாளுக்கு வாதி மட்டுமே வாரிசு என்பதும் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3ன் மூலம் தெரியவருகிறது. மேலும் வழக்கு சொத்தின் விஸ்தீரணம் வருவாய் ஆவணங்களில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலக குறை தீர்க்கும் நாளில் வாதி மனு கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.5ன் பரிசீலனையில் தெரியவருகிறது. வா.சா.ஆ.5 மனுவிற்கு எதிர்வாதிகள் தரப்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தகுந்த வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியம் மூலம் வாதி இவ்வழக்கை நிரூபித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் வருவாய் துறை ஆவணங்களில் வழக்கு சொத்தின் விஸ்தீரணம் குறித்து திருத்தம் கோரி வாதி தரப்பில் மனு கொடுத்துள்ள போதும் அது தொடர்பாக பிரதிவாதிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே பட்டா பாஸ் புத்தக சட்டத்தின் கீழ் இவ்வழக்கு தடை செய்யப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் மூலம் வாதி இவ்வழக்கை நிரூபித்துள்ளதால் வழக்கில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியது என்று எழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>11. எழுவினா 3–க்கான தீர்வு :</u>**

மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வழக்கில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று எழுதினாக்கள் 1 மற்றும் 2 க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால், வழக்கின் தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் எதுவும் இல்லை என்று எழுவினா 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:41:03 +0530

**12. முடிவாக,** வழக்கு சொத்து குறித்து வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள புதிய புல எண்.217/6, பழைய புல எண்.130/15 பா சொத்தின் சரியான விஸ்தீரணம் வாதியின் தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணப்படி 0.19 செண்ட் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:41:09 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>
<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1 திரு. ராமசெல்வம் (வாதியின் மகன்)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.05.1960 | சாரதாம்பாளுக்கு பாக்கியத்தாச்சி எழுதிக் கொடுத்த கிரய ஆவண சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 23.08.2005 | சாரதாம்பாள் இறப்பு சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 12.12.2005 | சாரதாம்பாள் வாரிசு சான்று நகல் |
| வா.சா.ஆ.4 | 17.04.2023 | வாதி பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் |
| வா.சா.ஆ.5 | 22.01.2024 | பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கிய மனு |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -இல்லை-</u>

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:41:19 +0530

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய/ வரைவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண். 264/2024
நாள் – 11.03.2026